கரூர் மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் (பொது) அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை: திரு.பெ.திருமல்சாமி,

ந.க.அ3/ 15000 /2014

நாள். 22 .09. 2015

பொருள் : பொதுப்பணி – தமிழ்நாடு அமைச்சுப்பணி – தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் நடத்திய தொகுதி IV–இல் அடங்கிய தட்டச்சர் பணிகளுக்கான போட்டித் தேர்வு – 2013–2014–வரையான ஆண்டுகளுக்கு தேர்வு செய்யப்பட்ட சுருக்கெழுத்து தட்டச்சர் (நிலை III) – கரூர் மாவட்ட வருவாய் அலகில் பணிநியமனம் செய்யப்பட்டது – தனியரின் பணியினை சுருக்கெழுத்து தட்டச்சர் (நிலை III) நிலையில் பணிவரன்முறை செய்து ஆணையிடல்– தொடர்பாக.

பார்வை : கரூர் மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் (பொது) அவர்களின் செயல்முறைகள் ந.க.அ3/ 15000/2015 நாள்: 03.11.2014

******

ஆணை:

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் நடத்திய தொகுதி IV–இல் அடங்கிய சுருக்கெழுத்து தட்டச்சர் பணிகளுக்கான போட்டித் தேர்வு 2013–2014–வரையிலான ஆண்டுகளுக்கு தேர்வு செய்யப்பட்டு, பார்வையில் காணும் செயல்முறைகளின்படி கரூர் மாவட்ட வருவாய் அலகில் சுருக்கெழுத்து தட்டச்சராக பணிநியமனம் வழங்கப்பட்டு பணிபுரிந்து வரும் திருமதி.மு.ரேணுகாதேவி, சுருக்கெழுத்து தட்டச்சர்(நிலை III) பணியினை அவர் பணியில் சேர்ந்த நாளான 12.12.2014 முற்பகல் முதல் சுருக்கெழுத்து தட்டச்சர் (நிலை III) நிலையில் பணி வரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

“இப்பணி வரன்முறையானது, தொகுதி IV–இல் அடங்கிய பணியிடங்கள் 2013–2014 தொடர்பாக மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் / சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை ஆகியவற்றில் நிலுவையில் உள்ள ரிட் மனுக்களின் மீதான இறுதி தீர்ப்புகளுக்கு கட்டுப்பட்டதாகும்.”

இவ்வுத்தரவு தொடர்பாக, தனியர்களது பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் ஏற்படுத்திட இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

ஒம்/– பெ.திருமல்சாமி,
மாவட்ட ஆட்சித் தலைவரின்
நேர்முக உதவியாளர் (பொது),
கரூர்.

// உண்மை நகல் // உத்தரவுபடி//

அலுவலக மேலாளர்(பொது)

பெறுநர்
திருமதி.மு.ரேணுகாதேவி,
சுருக்கெழுத்து தட்டச்சர் (நிலை III),
மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம்,
கரூர்.

நகல்

1) மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் (கணக்குகள்), கரூர்.
2) அ3 இருப்பு கோப்பு.